Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 92 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | ஜனவரி 05, 2021

## இலங்கையில் அபாய பகுதிகள்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிக அபாய மிக்க பகுதிகளின் தகவல்கள் அடங்கிய புதிய வரைபடத்தை சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு வெளியிட்டுள்ளது.

03

## இலங்கை வந்தார் ஜெய்சங்கர்



இரண்டு நாள் பயணமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இன்று மாலை இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இந்தியாவுக்கு சொந்தமான விசேட விமானத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக அவர் இன்று மாலை 4.20 க்கு நாட்டை வந்தடைந்துள்ளார்.

அவருடன் இந்திய வெளிவிவகார

03

## யாழ். மாவட்ட நுழைவிடங்களில் விரைவில் துரித அண்டிஜன் பரிசோதனை!




யாழ் மாவட்டநுழைவிடங்களில் விரைவில் துரித அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்

யாழ் மாவட்டத்தில் தற்போது உள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில்

03

## முகக்கவசம் அணியாத 300 பேருக்கு சோதனை இருவருக்குத் தொற்று

முகக்கவசம் அணியாது நடமாடிய 300 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் பிரதி காவல்துறைமா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

03


## மட்டக்களப்பு வாவியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னஉப்போடை வாவி பகுதியல் ஆண் ஒருவரின் சடலம் இன்று(05) மீட்கப்பட்டுள்ளது

புன்னச்சோலை பகுதியை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 48 வயது மதிக்கத்தக்க ஆரோக்கியசாமி மரியதாஸன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

03

## வடக்கில் இன்று 13 பேருக்கு தொற்று



வடக்கு மாகாணத்தில் இன்றும் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்யமூர்த்தி தெரிவித்துள்ளார்

03

## கிழக்கிலும் 38 பேருக்கு புதிதாக கொரோனா

கிழக்கு மாகாணத்தில் 38 புதிய கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் இன்று (05) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

03



# மட்டக்களப்பில் வங்கி ஊழியர்கள் 25 பேருக்கு கொரோனா தொற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் உட்பட 25 பேருக்கு இன்று செவ்வாய்க்கிழமை (05) கொரோனா தொற்று கண்டறியப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 288 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன் தெரிவித்தார்.

03

## சுமந்திரனுடன் பேசுவாராம் விக்கியுடன் மாட்டாரம்

### கஜேந்திரகுமாரின் அரசியல் கேலிக்கூத்தென்கிறார் சுரேஸ்

ஏம்.ஏ.சுமந்திரனுடன் இணைந்து ஒரே மேசையில் பேச தயாராகியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சி.வி.விக்கினேஸ்வரனுடன் பேச மறுத்தமை தொடர்பிலேயே சுரேஸ்பிறேமச்சந்திரன் கேலிக்கூத்தென தெரிவித்துள்ள சுரேஸ் பிறேமச்சந்திரன்

03

## அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கு

### வடக்கு கிழக்கில் போராட்டம்




வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்களின் ஏற்பாட்டில், நல்லூர் நல்லை ஆதினத்தின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று

03



## அத்துரலிய ரத்தன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம்



எங்கள் மக்கள் சக்தி கட்சியில் இருந்து தேசிய பட்டியலில் நாடாளுமன்றிற்கு தெரிவு செய்யப்பட்ட அத்துரலிய ரத்தன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக சற்றுமுன்னர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் இன்று (செவ்வாய்க்கிழமை) அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனமொன்று கிடைத்திருந்த நிலையில், அந்த ஆசனத்துக்கான உறுப்பினரைத் தெரிவு செய்வதில் தொடர்ந்து இழுபறி நிலை நீடித்தது.

அதன் பின்னர் எங்கள் மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அத்துரலிய ரத்தன தேரர் பெயரிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன

கொழும்பு மாவட்டத்தின் முகத்துவாரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மேலும் மூன்று பிரதேசங்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 5 மணி முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய முகத்துவாரம் பொலிஸ் அதிகாரத்திற்கு உட்பட்ட புனித - என்றூஸ் வீதி, புனித - என்றூஸ் மேல் மற்றும் கீழ் வீதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களில் பெரும்பாலானோர் குறித்த பகுதிகளை சேர்ந்தவர்கள் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார்.



முகத்துவாரம் பொலிஸ் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகள் நீண்ட நாட்களாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

இரும்புச்சத்து குழந்தைகளுக்கு மிக அவசியமான ஊட்டச்சத்தாகும். தாய்ப்பாலில் இலகுவில் அகத்துறிஞ்சப்படகூடிய இரும்புச்சத்து காணப்படுகிறது. மீன், இறைச்சி, ஈரல், கீரை வகைகளில் இலகுவாக அகத்துறிஞ்சக்கூடிய இரும்புச்சத்து காணப்படுகிறது. மாப்பாலில் அதிகளவில் இரும்பு சத்து காணப்படுவதாக கூறினும் அது இலகுவாக அகத்துறிஞ்சப்பட முடியாத இரும்புச்சத்தாகும். இரும்புச் சத்து குறைபாட்டால் குருதி சோகை ஏற்படுவதுடன் குழந்தையின் வளர்ச்சி, விருத்தி என்பன பாதிக்கப்படும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீ வ்**

# கடத்தப்பட்ட ஹங்வெல்ல தேரர் எரிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்பு!

## பெண் உட்பட நால்வர் கைது!



ஹங்வெல்ல - கொடிகந்த தியான மண்டபத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட தேரர் எரிக்கப்பட்ட நிலையில் சடலாமக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தும்மோதர, கொஸ்வத்தை, கொடிகந்த தியான மண்டபத்திலிருந்து கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட 65 வயதுடைய உடுவில தம்மசிறி தேரரின் சடலம் கொட்டதெனியாவ பகுதியில் உள்ள பொதுமயானம் ஒன்றில் மீட்கப்பட்டது.

தியான மண்டபத்திலிருந்த தேரரை இனந்தெரியாத நபர்கள் சிலர் வேன் ஒன்றினால் கடத்திச் சென்றுள்ளதாக ஹங்வெல்ல பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று கொட்டதெனியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பொது மயானமென்றில் இனந்தெரியாத சடலமொன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்தச் சடலம் தொடர்பில் கொட்டதெனியாவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், இதன்போது, குறித்த தியான மண்டபத்தைச் சேர்ந்த மற்றுமொரு தேரர் ஒருவர், அந்த சடலம் தமது தியான மண்டபத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட தேரருடையது என்று அடையாளம் கண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சடலம் தொடர்பான நீதிவான் பரிசோதனைகளை மினுவாங்கொட நீதிவான் நீதிமன்றம் முன்னெடுத்த பின்னர் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## சித்திரைக்கு முன்னர் இலங்கையில் முதலாவது தடுப்பூசி வழங்கப்படும்

எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டிற்கு முன்னர் கொவிட் 19 வைரஸிற்கான முதலாவது தடுப்பூசியை இந்நாட்டவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் என ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம் பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதே அவர் இந்த விடயம் தொடர்பான தகவலை வெளியிட்டார்.

மேலும் அதற்கான கலந்துரையாடல் தற்போது இறுதி மட்டத்தில் இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## முகக்கவசம் அணியாதவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை



முகக்கவசம் அணியாதவர்களை சட்ட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை போன்ற தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு, இன்று முதல் பி.சீ.ஆர். மற்றும் ரெபிட் அண்டிஜன் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்படுவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனா உயிரிழப்பு 215ஆக உயர்வு

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் இரு நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்றிரவு உறுதிப்படுத்தினார்.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 215 ஆக உயர்வடைந்துள்ளது.

அதன்படி, இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய ஆணொருவர் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் கடந்த 02ஆம் திகதி மரணமானார்.

மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றினால் ஏற்பட்ட சுவாச நோய்த் தொற்று மற்றும் நுரையீரல் நோய்த்தொற்றின் சிக்கலான நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இரத்தினபுரியைச் சேர்ந்த 86 வயதான ஆணொருவர் அவரது வீட்டில் கடந்த ஜனவரி முதலாம் திகதி மரணமானார்.

மரணத்திற்கான காரணம் கொவிட் 19 நிமோனியா மற்றும் கால்-கை வலிப்பு நிலை என அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் பொருளாதாரம் 3.9 வீதத்தால் எதிர்மறை வளர்ச்சியை காட்டுகிறது

## மத்திய வங்கி ஆளுனர் தெரிவிப்பு

2020 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதம் முறை 3.9 வீதத்தில் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மனன் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுப் பரவலின் தாக்கம் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதாரத்தை வெகுவாக பாதித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 2020 ஆண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியிலே நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்ததுடன், 3 ஆவது காலண்டில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுவதகவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 2021 ஆம் ஆண்டு முழுவதும் ஒற்றை இலக்க வட்டி விகிதத்தை நடைமுறைப்படுத்த மத்திய வங்கி எதிர்பார்த்துள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மனன் மேலும் தெரிவித்துள்ளார்.

சவாலான உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதாரத்திற்கு போதுமான உத்வேகத்தை வழங்க நாணய மற்றும் நிதி தலையீடுகள் மூலம் தொடர்ச்சியான ஆதரவு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மட்டக்களப்பு...

குறித்த நபர் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது முதலை தாக்கி உயிரிழந்துள்ளார் என தெரியவந்துள்ளது

களுவாஞ்சிகுடி திடீர் மரண விசாரனை அதிகாரி சிதம்பரப்பிள்ளை சீவரெத்தினம் குறித்த இடத்திற்கு வருகை தந்து சடலத்தை பார்வையிட்டதுடன், குறித்த சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிசாரை பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முகக்கவசம்...

கொழும்பில் இவ்வாறு முகக்கவசம் அணியாது நடமாடிய 300 பேர் கட்டாய ரெபிட் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே அவர்களில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்று (ஜனவரி-05) முதல் முகக்கவசம் அணியாது பொது இடங்களில் நடமாடுபவர்களுக்கு கட்டாய ரெபிட் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரனுடன்...

இனஅழிப்பிற்குள்ளான தமிழ் மக்களிற்கு பர்மா மற்றும் சிரியா நாடுகளில் அரங்கேறிய இனஅழிப்பு தொடர்பிலான சர்வதேசத்தின் கவனம் நம்பிக்கையினை தந்துள்ளது எனவும் தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் தமிழ் தேசியம் சார்ந்து செயற்படுகின்ற கட்சிகள் ஒற்றுமையாக பொது இணக்கப்பாட்டிற்கு வருவதன் மூலம் ஜநாவில் காத்திரமான நகர்வுகளை முன்னெடுக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று செவ்வாய் கிழமை நடைபெற்ற சந்திப்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளிற்கு பதிலளித்த அவர் இந்நிலையில் ஒரு சில தமிழ் தலைவர்களது போக்கானது கேலிக்குரியதாகவும் தங்களை ஒரு தலைமைத்துவத்தினுள் அடையாளப்படுத்துவதாகவும் இல்லாதுள்ளது.

தமிழ் கட்சிகளிடையே இருப்பது கொள்கை முரண்பாடாக அல்லது கையாள்கை பிரச்சினையாகவே இருக்கும்.அது அல்லாது அவர்கள் ஒவ்வொருவரது வீட்டுப்பிரச்சினைகள் அல்ல.

தமிழ் மக்கள் நலன்கருதி எங்களிற்குள் பேச தயாராக இல்லாதவர்கள் தமிழ் மக்களிற்கான தலைவர்களாக இருக்க தகுதியற்றவர்கள்.அவர்கள் தங்களை தலைவர்கள் என சொல்லிக்கொள்ளவும் அருகதையற்றவர்களென அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் வவுனியாவில் நடைபெற்ற ஜநாவில் இலங்கை தமிழ் மக்களது இனஅழிப்பிற்கான நீதி கோரும் நகர்வுகள் தொடர்பான சந்திப்பின் போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரனுடன் ஒரே மேசையில் அமர்ந்து பேச தயாரில்லையென தெரிவித்திருந்தார்.

தேவையாயின் அவர் சார்பு பிரதிநிதிகளுடன் மட்டும் பேச தயார் எனவும் தெரிவித்திருந்தார்.

எம்.ஏ.சுமந்திரனுடன் இணைந்து ஒரே மேசையில் பேச தயாராகியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சி.வி.விக்கினேஸ்வரனுடன் பேச மறுத்தமை தொடர்பிலேயே சுரேஸ்பிறேமச்சந்திரன் கேலிக்கூத்தென தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்ட...

கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் இன்றைய நிலையில் நேற்று யாழில் 7 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள். கடந்த இரண்டு நாட்களாக தொற்று உறுதி செய்யப்படாத நிலையில் நேற்றைய பிசிஆர் பரிசோதனையில் 7 நபர்களுக்கு தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள்.

இதில் 6 பேர் ஏற்கனவே மருதனார்மடம் தொற்றாளர்களுடன் தொடர்பினை பேணி தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் பருத்தித்துறையில் மேலும் ஒருவர் வேறு சுகயீனம் காரணமாக அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளது

அவரைப் பற்றிய தகவல்கள் சுகாதாரப் பிரிவினர் சேகரிக்கப்பட்டு வருகின்றது அதற்குரிய பின்னணியும் ஆராயப்பட்டு வருகின்றது .

இந்த அடிப்படையிலே யாழ் மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானோர்அக்டோபர் மாதத்திற்கு பின்னர் 168 ஆக அதிகரித்துள்ளது

அத்தோடு குணமடைந்தோரின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது அந்த நிலையை தற்பொழுது சுய தனிமைப்படுத்தலில் உள்ளோரின்எண்ணிக்கை சற்று குறைவடைந்துள்ளது .

ஆயிரத்து 41குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 807 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டு ள்ளார்கள் நேற்று உறுதி செய்யப் பட்டவர்களில் தெல்லிப்பளைச் சேர்ந்த மூவரும் சண்டிலிப்பாய் சேர்ந்த இருவரும் மானிப்பாய் சேர்ந்த ஒருவரும் பருத்தித்துறையை சேர்ந்த ஒருவருமாக 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

தற்போதைய சூழ்நிலையில் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது யாழ் மாவட்டத்தில் தொற்று உறுதிசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை சற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது இருந்த போதிலும் தொடர்ச்சியாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் குறித்த நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் எதிர்பார்க்கின்றோம் எனினும் அதற்கு பொதுமக்களுடைய ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

பொதுமக்கள் இதற்கு ஒத்துழைக்கும் பட்சத்தில் நமது மாவட்டத்தில் தொற்று நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் மேலும் எதிர்வரும் இரண்டு வாரங்களும் மிகவும் அபாயகரமான காலப்பகுதியாக இருக்கின்றது ஆனால் சற்று விழிப்பாக இருந்து பொதுமக்கள் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்

தற்பொழுது அரசாங்கத்தினால் திரையரங்குகள் மற்றும் ஏனைய விடயங்களிலும் இயல்பு நிலையை ஏற்படுத்தும் முகமாக சில மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளார்கள் இந்த நிலையிலே கூடுதலாக விழிப்பாக இருக்க வேண்டிய தாகவுள்ளது.

அதேவேளையில் போக்குவரத்து விடயத்திலும் மிகவும் கவனமாக செயற்படவேண்டியுள்ளதுஅபாய வலயங்களுக்கு சென்று வருபவர்கள் தங்களுடைய விவரங்களை கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும்

அதே வேளையில் யாழ் மாவட்டத்தில் துரித அன்ரிஜன் பரிசோதனை செய்வதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது அந்த முடிவு விரைவில் வடக்கு சுகாதார பிரிவால் அறிவிக்கப்பட உள்ளது.

அதாவது யாழ். மாவட்டத்திற்குள் நுழையும் வாயில்களில் ஆனையிறவு மற்றும் சங்குப்பிட்டி போன்ற இடங்களில் துரித அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது எதிர்வரும் நாட்களில் குறித்த அண்டியல் பரிசோதனையினை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகிறது

வடமராட்சி பிரதேசத்தில் ஒருவர் தொற்றுக் குள்ளாகியுள்ளதனால் சுகாதாரப் பிரிவு அவருடைய தரவுகளை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் .

அதனுடைய பின்னணி தொடர்பாக ஆராய்ந்த பின்னரே அதனை முடக்குவதாக இல்லையா என்பது தொடர்பாக தீர்மானிக்க முடியும் எனினும் சுகாதாரப் பிரிவினராலேயேஅந்த முடிவு அறிவிக்கப்படும் எனினும் தற்போதைய நிலையில் வடமராட்சிப் பிரதேசத்தினை முடக்குவது தொடர்பில் தீர்மானமில்லை எனவும் தெரிவித்தார்.

## இலங்கையில்...

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கையானது தற்போது 45 ஆயிரத்தையும் கடந்துள்ளது.

நேற்றைய தினம் மாத்திரம் மொத்தமாக 468 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு புதிதாக அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் 451 பேர் பேலியகொட - மினுவாங்கொடை கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 16 பேர் சிறைச்சாலை கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் மற்றுமொருவர் பாகிஸ்தானிலிருந்து வருகை தந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் பதிவான மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையானது 45 ஆயிரத்து 242 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## இலங்கை வந்தார்...

அமைச்சின் உயர் அதிகாரிகள் இருவரும் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இரு நாட்களில் அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் சந்திப்புகளை மேற்கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ விஜயம் 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் ஒரு உயர்மட்ட வெளிநாட்டு பிரமுகரின் முதல் வருகையை குறிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கிலும்...

" கிழக்கு மாகாணத்தில் 1,323 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் இவர்களில் 802 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 539 நபர்கள் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றுவருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று காரணமாக எழுவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன." என்றும் அவர் கூறினார்.

## வடக்கில் இன்று...

யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் யாழ். மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 496 பேருக்கு கொவிட்-19 பரிசோதனை இன்று செய்யப்பட்டது.

இதில் வடமாகாணத்தில் 13 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி,

**யாழ் மாவட்டம்**

இனுவில் 1

கொக்குவில் 1 ( தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் )

**கிளிநொச்சி மாவட்டம் - 1**

**வவுனியா மாவட்டம் - 5**

**மன்னார் மாவட்டம் - 5**

## அரசியல் கைதிகளுக்கு...

இடம்பெற்றுள்ளது.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இலங்கை அரசே தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்க, தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கு, தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் இல்லை, எமது உறவுகளை சிறையில் மடியவிட வேண்டாம்". போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில்,அரசியல் கைதிகளை விடுவிக்க கோரி முல்லைத்தீவு மாவட்டத்திலும் இன்று கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அதே போல் கிளிநொச்சி மற்றும் மன்னாரிலும் இதே கோரிக்கையை வலியுறுத்தி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பில்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொண்டுவரும் எழுந்தமானமாக இன்று 552 பேருக்கு பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையில் மட்டக்களப்பு சுகாதார பிரிவில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் மற்றும் தனியார் வங்கியில் கடமையாற்றும் இருவர் உட்பட 3 பேருக்கும். பட்டிப்பளை சுகாதார பிரிவில் 2 பேருக்கும், காத்தான்குடி சுகாதார பிரிவில் 16 பேருக்கும், கோறளைப்பற்று மத்திய சுகாதார பிரிவில் 3 பேரும், ஓட்டுமாவடி சுகாதார பிரிவில் ஒருவர் உட்பட 25 பேருக்கு தொற்றுதி கண்டறியப்பட்டுள்ளது

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் 288 ஆக அதிகரித்துள்ளதுடன் இவர்களில் 182 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். எனவே பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள சுகாதார முறைகளை பேணி செயற்படுமாறு அவர் தெரிவித்தார்.

# தோட்டத் தொழிலாளர் விவகாரத்தில் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்

## ஜே.வி.பி. யின் முன்னாள் எம்.பி. இராமலிங்கம் சந்திரசேகர்



அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களின் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். இவர்களின் நலன்களை பேணாத அரசாங்கம் கம்பெனிகளால் நிர்வகிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட நலன்கள் குறித்து பேசி வருவது வேடிக்கையான விடயமாகும். அரசாங்கம் இத்தகைய பித்தலாட்ட நிலைமைகளைக் கைவிட்டு பெருந் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதில் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டுமென்று நேற்று (04) கொத்மலை வீரகேசரி நிருபர் திரு. துரைராஜாவிற்கு அளித்த பேட்டியில் ஜே.வி.பி. யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் கூறுகையில்,

பெருந்தோட்டங்களும் தொழிலாளர்களும் இன்று மோசமான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள நிலையில் இவற்றிலிருந்தும் மீட்டெடுக்கவேண்டிய முக்கிய பொறுப்பு காணப்படுகின்றது. இல்லையேல் தோட்டங்களினதும் இருப்பு கேள்விக்குறியாகும். சுதந்திரத்திற்கு முன்னும்சரி சுதந்திரத்திற்கு பின்னும்சரி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு சவால்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். இவற்றுள் பொருளாதாரச் சவால் மிகவும் முக்கியமானதாகும். இச்சவால் காரணமாக மலையக சமூகத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கின்றது.

இலங்கை வரலாற்றில் தோட்டத் தொழிலாளர்கள் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. இனியும் இந்த வரலாற்றினைத் தொடர விடுவதா? என்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு குறித்து பேசப்பட்ட கடந்த ஆறு ஆண்டுகளில் இரண்டு அரசாங்கங்கள் மாறிமாறி ஆட்சிக்கு வந்துள்ளன. இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் உண்மையான மனப்பாங்கு இருக்கவில்லை. தேர்தல் காலங்களில் மேலெழும்பும் கோஷங்களும் கோரிக்கைகளும் பின்னர் கீழிறங்கிப் போவது வரலாறாகும். இதுவே இம்முறையும் நடந்தேறி இருக்கின்றது. ஆயிரம் ரூபா என்பது பேச்சளவில் முற்றுப்பெற்றுள்ளது. கம்பெனிகளுடன் எவ்விதமான கலந்துரையாடல்களிலும் ஈடுபடாத அரசாங்கம், வரவு - செலவுத் திட்டத்தில் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப் போவதாக உறுதியளித் திருந்தது. எனினும் இந்த வாக்குறுதியின் நம்பகத்தன்மையை பெருந்தோட்ட மக்கள் இப்போதுதான் விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். வேலை நாட்கள் குறைவாக வழங்கப்படுகின்ற நிலையில் வேலை நாட்களுக்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதிலும் இழுபறிநிலை காணப்படுகின்றது. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை பெற்றுக்கொள்வதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன. இவற்றை தீர்த்துவைப்பதில் அக்கறை காட்டாத அரசாங்கம், கம்பெனிகளால் நிர்வகிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட நலன்கள் குறித்து பேசி வருவது வேடிக்கையான விடயமாகும். அரசாங்கம் இத்தகைய பித்தலாட்ட நிலைமைகளைக் கைவிட்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவது குறித்து இதயசுத்தியுடன் செயற்படவேண்டும். சமகால வாழ்க்கை நிலைமைகளை கருத்தில்கொண்டு நோக்குகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1500 ரூபாவையேனும் நாளாந்தம் வழங்குதல் வேண்டும். ஆனால் ஆயிரம் ரூபாவுக்கே இழுபறியாக இருப்பது வேதனைக்குரிய தாகும் என்றார்

# கொரோனாவைவிட புதிய கொடூரமான வைரஸ் உலகைத் தாக்கும் என எச்சரிக்கை

கொரோனா வைரஸை விட புதிய கொடூரமான வைரஸ் உலகைத் தாக்கக் கூடும் என்று ஆப்பிரிக்க விஞ்ஞானி ஜாக்குவஸ் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், உலகம் மிகக் கொடூரமான வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகும் என்றும் அந்த எக்ஸ் எனப்படும் மர்ம நோய் கொரோனாவைவிட மிக வேகமாகப் பரவுவதாகவும் எபோலாவைவிட உயிர்க்கொல்லியாகவும் இருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

மனித குலம், மிக விரைவில் இன்னும் பல மோசமான வைரஸ் தாக்குதல்களை சந்திக்கக் கூடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் ஆப்ரிக்காவின் மழைக்காடுகளில் இருந்து புதிய வைரஸ்கள் உருவாகி அது உலகம் முழுவதும் பரவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பறவைக் காய்ச்சலை தடுக்க 36 ஆயிரம் வாத்துகளை கொல்லத் திட்டம்!

கேரளாவில் பரவி வரும் பறவைக் காய்ச்சலைத் தடுக்க 36 ஆயிரம் வாத்துகளை கொல்ல அம்மாநில அரசு தீர்மானித்துள்ளது.

இது குறித்து கேரள அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், “வாத்துகளால் மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் பரவுவதை தடுக்க போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆங்காங்கே தகவல் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. காய்ச்சல் அறிகுறி உள்ளவர்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு உடனடியாக தகுந்த சிகிச்சை அளிக்கப் படுகிறது” எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பறவைக் காய்ச்சலால் இறப்புகள் நிகழும் பகுதிகளில் மாதிரிகளை சேகரித்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும் என மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

# இலங்கையில் இறப்புக் குறைவு! WHO பாராட்டு

உலகளவில் ஒப்பிடும் போது நாட்டின் இறப்பு விகிதம் (0.5%) மிகக் குறைவாக இருப்பதாகவும் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை சிறப்பாக செயற்படுவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்திலிருந்து கொரோனா தொற்று அதிகரித்துள்ள போதிலும் தற்போது அடையாளம் காணப்படும் நோயாளிகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# பொதுவெளியில் போதைப்பொருட்கள் அழிக்கப்படும்

## சரத் வீரசேகர

எதிர்காலத்தில், நாட்டில் கைப்பற்றப்பட்ட பாரிய அளவிலான போதைப் பொருட்களின் மாதிரிகளை தக்கவைத்து பின்னர் கைப்பற்றப்பட்ட அனைத்து போதைப் பொருட்களையும் அழிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றில் இன்று (செவ்வாய்க் கிழமை) உரையாற்றிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, 2015 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட 717 கிலோகிராம் போதைப் பொருட்களுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் 2740 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இலங்கையில் போதைப் பொருள் கடத்தல் குறையவில்லை என சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் இதற்கு பதிலளித்த அமைச்சர் சரத் வீரசேகர, நாட்டில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் நீதிமன்றங்களில் வழக்கு முடிவடையும் வரை பல ஆண்டுகளாக ஆதாரமாக வைக்கப்படுவதால் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாக தெரிவித்தார்.

எனவே இவ்வாறான கவலைகளை போக்க, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில், சட்ட நடவடிக்கைகளுக்கு மாதிரிகளை வைத்திருந்த பின்னர் கைப்பற்றப்பட்ட அனைத்து போதைப் பொருட்களையும் அழிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது என கூறினார்.

இந்த விவகாரம் சட்டமா அதிபருடன் கலந்துரையாடப்படும் என்றும் மாதிரிகள் நேரடியாக அரசு ஆய்வாளருக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்த அமைச்சர், அதே நேரத்தில் போதைப் பொருட்கள் அனைத்தும் வெளிப்படையாக அழிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 4 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை தொடர்ந்து கோரோனா தொற்று நீக்க செயற்பாடு





நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் திங்கட் கிழமை (4) 97 97 Rapid Antigen Test பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் 4 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் அலுவலக பிரிவுகளில் தொற்று நீக்கும் மருந்து தெளிக்கும் செயற்பாட்டினை நாவிதன்வெளி பிரதேச சபை இன்று(5) முன்னெடுத்துள்ளது.

கொரோனா அனர்த்தம் மீள பரவ ஆரம்பித்துள்ள நிலையில் அதிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக இன்று(05) முற்பகல் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் அமரதாஸ ஆனந்த ஆலோசனையில் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பிரதேச செயலகத்தின் வாகன தரிப்பிடங்கள் மோட்டார் சைக்கிள்கள் வாகனங்கள் சமூர்த்தி பிரிவு காணி பிரிவு கணக்காளர் பிரிவு மேலதிக மாவட்ட பதிவாளர் பிரிவு உள்ளிட்ட பகுதிகள் மலசலகூடங்கள் மருந்துகள் தெளிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன.